பிரசார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**20 08 2026** **THURSDAY** **6.30 PM**

## மாநிலச்செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1) **31-**ஆவது தென்மண்டல முதலமைச்சர்கள் மாநாடு உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தலைமையில் இன்று சென்னையை அடுத்த மகாபலிபுரத்தில் நடைபெற்றது.

2) விடுதலை போராட்ட இயக்கத்தில் பங்கேற்ற மாவீரர் ஒண்டிவீரனின் தியாகமும், வீரமும் போற்றுதலுக்குரியது என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

3) தமிழகத்தில் கூட்டுறவு அமைப்புகளின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்திருப்பதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

4) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களில் பேருந்து சேவைகளின் எண்ணிக்கையை தவெக அரசு குறைக்கக் கூடாது என்று பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

5) **18** வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை கூடைப்பந்து போட்டியில் இந்தியா இன்று ஈரானை எதிர்கொள்கிறது

-- இனி விரிவான செய்திகள் ---

<<<<<>>>>>>>

கூட்டாட்சி தத்துவத்தின் அடிப்படையில் மாநிலங்களுக்கு பாதுகாப்பு, உள்கட்டமைப்பு, சுற்றுச்சூழல் மற்றும் சுகாதாரத்

திட்டங்களுக்கு போதிய நிதி அளிக்க வேண்டும் என்று தென் மண்டல முதலமைச்சர்கள் மாநாட்டில் வலியுறுத்தப்பட்டது.

சென்னையை அடுத்த மகாபலிபுரத்தில் மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தலைமையில் இன்று நடைபெற்ற 31-ஆவது தென்மண்டல முதலமைச்சர்கள் மாநாட்டில் இது வலியுறுத்தப்பட்டது.

தமிழக முதலமைச்சர் திரு விஜய், கர்நாடக முதலமைச்சர் திரு D K சிவகுமார், கேரளம் முதலமைச்சர் திரு சதீசன், ஆந்திர முதலமைச்சர் திரு சந்திரபாபு நாயுடு, தெலங்கானா துணை முதலமைச்சர் திரு Mallu Bhatti Vikramarka ஆகியோரும், புதுச்சேரி, அந்தமான் நிக்கோபார் தீவுகளின் துணை நிலை ஆளுநர்கள் மற்றும் லட்சத்தீவு தலைமை நிர்வாகியும், மூத்த அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் சார்பில், உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா-விடம் பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

<<<<<>>>>>>>>

மேகதாது அணை திட்டம் செயல்படுத்தப்பட்டால், தமிழகம் மற்றும் புதுச்சேரி விவசாயிகள் பயனடைவார்கள் என்று கர்நாடக முதலமைச்சர் திரு D K சிவகுமார் தெரிவித்துள்ளார்.

தென் மண்டல முதலமைச்சர்கள் மாநாட்டில் கலந்துகொண்டபின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த அணை திட்டம் இரு மாநிலங்களுக்குமே பயன்தரும் என்று கூறினார்.

இதனிடையே, பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், மேகதாது அணை தொடர்பாக கர்நாடக முதலமைச்சர் தெரிவித்துள்ள கருத்து தமிழகத்திற்கு உகந்தது அல்ல என்று கூறியுள்ளார்.

காவிரி நடுவர் மன்றம் மற்றும் உச்சநீதிமன்றதின் தீர்ப்புகளை பலவீனப்படுத்தும் வகையில் அவரது பேட்டி அமைந்துள்ளதாக கூறியுள்ளார்.

காவிரி நதிநீர் பிரச்சினை தொடர்பாகவோ, மேகதாது அணை கட்டுவது தொடர்பாகவோ கர்நாடக முதலமைச்சரின் அழைப்பை ஏற்று தமிழகம் எவ்வித பேச்சுவார்த்தையிலும் கலந்துகொள்ளக் கூடாது என்று வலியுறுத்தியுள்ளார்.

காவிரி நீர் பகிர்வு மேகதாது அணை ஆகியவை தொடர்பாக உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசு தொடர்ந்துள்ள வழக்குகளை விரைவாகவும், திறமையாகவும் நடத்தி, மாநிலத்தின் உரிமைகளை தமிழக அரசு பாதுகாக்க வேண்டும் என்றும் டாக்டர் அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.

<<<<<>>>>>>>

விடுதலை போராட்ட இயக்கத்தின் தொடக்கக் காலத்தில் தாய்நாட்டிற்காகவும், சமூகத்திற்காகவும் தமது இன்னுயிரை தியாகம் செய்த மாவீரர் ஒண்டிவீரனின் தியாகமும், வீரமும் போற்றுதலுக்குரியது என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

ஒண்டிவீரரின் 255-ஆவது நினைவு நாளையொட்டி அவர் விடுத்துள்ள சமூக வலைதள பதிவில், அவரது வரலாற்றை இளைய தலைமுறையினருக்கு எடுத்துச் சொல்வோம் என்று கூறியுள்ளார்.

<<<<<>>>>>>>

தமிழகத்தில் கூட்டுறவு அமைப்புகளின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்திருப்பதாக மாநில அரசு வெளியிட்டுள்ள கூட்டுறவுத்துறை மானியக் கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் 24 ஆயிரத்து 830 கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வருவதாக அரசு கூறியுள்ளது.

அரசின் செயல்பாடுகளை வெளிப்படைத் தன்மையுள்ளதாகவும், நவீன தொழில்நுட்பத்துடன் இணைந்து சிறப்பான சேவையை வழங்குவதற்கான திறன் மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அரசு முடிவு செய்துள்ளது.

விவசாயிகள், சுயஉதவிக்குழுக்கள், இளையோர் மற்றும் விளிம்பு நிலையில் வாழும் மக்களுக்கான சேவைகளை முழு அளவில் வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருவதாக கொள்கை விளக்கக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

மாணவர்கள் கூட்டுறவுத்துறை செயல்பாடுகளில் ஈடுபடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும், **2026-27**-ஆம் கல்வி ஆண்டில் கூட்டுறவுத்துறை மேலாண்மை நிறுவனங்களில் **8** ஆயிரத்து **868** மாணவர்கள் பயின்று வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

பர்கூர், லால்குடி மற்றும் ஆத்தூரில் கூட்டுறவு சங்கங்களின்கீழ் செயல்படும் கல்வி நிறுவனங்களில மாணவர் சேர்க்கை எண்ணிக்கை வெகுவாக அதிகரித்துள்ளதாக அரசு தெரிவித்துள்ளது.

ஆத்தூர் கூட்டுறவு சங்கத்தால் நடத்தப்படும் கல்லூரியில் **14** இளநிலை கல்வி படிப்புகள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

லால்குடியில் செயல்படும் கூட்டுறவு தொழில்நுட்ப கல்லூரியில், மெக்கானிக்கல், கணினி மற்றும் மின் பொறியியலில் டிப்ளமோ படிப்புகள் வழங்கப்படுவதாக மானியக் கோரிக்கையில் கூறப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>>

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களில் பல பேருந்து சேவைகளை நிறுத்துவதற்கு மாநில அரசு திட்டமிட்டு வருவது அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது என்று பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

அவர் இன்று வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், விழுப்புரம் அரசு போக்குவரத்துக்கழக கோட்டத்தில் டீசல் செலவை குறைத்து வருவாயை உயர்த்தும் நோக்கில் 136 பேருந்து சேவைகள் குறைக்கப்பட்டு விட்டதாகவும் கூறியுள்ளார்.

அரசு போக்குவரத்தை வணிகமாக கருதாமல், மக்களின் அடிப்படை உரிமையாக கருதி பேருந்து சேவைகளை ரத்து செய்யும் முடிவை ஆளும் தவெக அரசு கைவிட வேண்டும் என்றும், திரு நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

<<<<<>>>>>>>

விருதுநகர் மாவட்டம் சிவகாசியில் மத்திய அரசின் மக்கள் நலத்திட்டங்கள் குறித்த மூன்று நாள் விழிப்புணர்வு கண்காட்சி நடைபெற்று வருகிறது.

தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின், சென்னை மண்டல மத்திய தகவல் தொடர்பகம் ஏற்பாடு செய்துள்ள இந்த கண்காட்சியில், முக்கிய நலத்திட்டங்களை விளக்கும் அரங்குகள் இடம்பெற்றுள்ளன.

பிரதமரின் வங்கிக் கணக்குத் திட்டம், அனைவருக்கும் வீட்டுவசதித் திட்டம், தூய்மை பாரத இயக்கம், ஜல் ஜீவன் இயக்கம், இலவச சமையல் எரிவாயு இணைப்புத் திட்டம், பிரதமரின் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் போன்றவற்றை விளக்கும் அரங்குகளை பயனாளிகள் பார்வையிட்டனர்.

இந்த கண்காட்சி அரங்குகள் மூலம் மத்திய அரசின் திட்டங்கள் குறித்த தகவல்களை அறிந்துகொண்டதாக பயனாளி அபி நந்தினி எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

***(Sound Byte — பயனாளி — 45 Sec. )***

<<<<<>>>>>>>

செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், தஞ்சாவூர் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் அடுத்த 24 மணிநேரத்தில் மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

***(Sound Byte — வி ஆர் துரை - 43 Sec. )***

<<<<<>>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் பிறந்தநாளை ஒட்டி, காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூரில் உள்ள அன்னாரது

நினைவிடத்தில் மாநில அமைச்சர் திரு. விஸ்வநாதன் உள்ளிட்டோர் மரியாதை செலுத்தினர்.

-------------

மதுரை மாவட்டம் தாதம்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள மதுரை ஒருங்கிணைந்த ஜவுளி பூங்காவில் இயங்கிவரும் பல்வேறு தொழில் உற்பத்தி அலகுகளை ஆட்சியர் திரு நிஷாந்த் கிருஷ்ணா ஆய்வு செய்தார்.

-------------------

கடலூர் மாவட்டம் காட்டுமன்னார் கோயில் பேரூராட்சி மற்றும் ஊராட்சி பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்து ஆட்சியர் திரு சிபி ஆதித்ய செந்தில்குமார் ஆய்வு மேற்கொண்டார்.

<<<<<>>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

**18** வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை கூடைப்பந்து போட்டியில் இந்தியா இன்று ஈரானை எதிர்கொள்கிறது.

அகமதாபாதில் இப்போட்டி இரவு மணி **7.30**-க்கும் தொடங்குகிறது.

--------------

தமிழ்நாடு பிரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் சென்னையில் நடைபெற்றுவரும் மதுரை அணிக்கு எதிரான ஆட்டத்தில் 158 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பேட் செய்துவரும் திருப்பூர் அணி சற்றுமுன்வரை 9 ஓவரில் 5 விக்கெட் இழப்பிற்கு 91 ரன் எடுத்துள்ளது.

**<<<<<END>>>>>>>**